சிதம்பரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பிச்சாவரம், சிதம்பரம் பகுதியிலே உள்ள நடராஜர் கோயிலுக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் பிச்சாவரத்திற்கும் வருகை புரிகின்றனர். எனவே, 16 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற சிதம்பரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக ஒரு சிறந்த சுற்றுலா தமிழ்நாடு ஹோட்டல் இருக்கின்ற காரணத்தினால் பிச்சாவரத்தில் புதிதாக அதுபோன்ற விடுதி ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் பிச்சாவரத்தினுடைய சாலைகள் எல்லாம் இப்போது செப்பனிடப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலே அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையை கணக்கிட்டு அதற்கேற்ப அங்கே விடுதி தேவை ஏற்படுமானால் அரசு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 39, திருமதி ஜெ. லோகாம்பாள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

39—

லால்குடி தொகுதியில் கோயிலைப் புதுப்பித்தல்

*14453—*திருமதி ஜெ. லோகாம்பாள் :*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, குழுமூர் கிராமத்தில் இருக்கும் பிடாரி அய்யனார் கோயில் பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) லால்குடி தொகுதியில் உள்ள அருள்மிகு பிடாரி அய்யனார் திருக்கோயில் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிக் குழு அமைத்து திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அய்யனார் பிடாரி கோயிலானது ரொம்பவும் சீர்குலைந்த நிலைமையிலே உள்ளது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியுள்ளார்கள். இருந்தாலும் எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ? எவ்வளவு சீக்கிரமாக அதைச் செய்து கொடுக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பிடாரி அய்யனார் திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 1439 ரூபாய் மட்டுமே. எனவே, இந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய திருப்பணிக் குழு விரைவில் அமைக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்தும், அரசு மானியமும் பெற்று விரைவில் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இன்னும் பணக்கார கோவில் ஆகவில்லை. அதற்கு நிலம் இருக்கிறது, மழை பெய்யாத காரணத்தால் விவசாயம் விளையவில்லை. ஆகவே விவசாயம் இருந்தால்தானே நெல் விளைந்தால்தானே பணக்கார கோவில் ஆக முடியும். ஆகவே, பணக்காரக் கோவில் ஆக முடியாத காரணத்தால் அரசே எடுத்து அந்தக் கோவிலைக் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

40—

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வசதியை மேம்படுத்துதல்

*38161—திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—